**கம்பம் நகராட்சி**

**2024–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21.02.2024–ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

*********

**கூட்டப்பொருள்**

| | |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையாளர் அவர்களின் **01/2024 –**ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்** – 428 பதிவு செய்யப்பட்டது. |
| 2 | நகராட்சி பொறியாளர் அவர்களின் **01/2024 –**ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்** – 429 பதிவு செய்யப்பட்டது |
| 3 | சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.38038/2013யுபிஏ2, நாள்.03.01.2017– இன்படி தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் கம்பம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் தங்குவதற்கான கட்டிடம் ரூ.90. இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண்.1082, நாள் 30.08.2018–இல் மேற்படி கட்டிடத்திற்கு மேற்பார்வை மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட விவேகானந்தா மாணவர் இல்லம், கம்பம் தொண்டு நிறுவனத்திற்கு 14.11.2018 முதல் அனுமதி வழங்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் பணிநீட்டிப்பு செய்து புதுப்பித்து மேற்படி தொண்டு நிறுவனமே பராமரிப்பதற்கு உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் இக்கோப்பின் அலுவலக குறிப்பு பக்க எண் 48– ல் 01.02.2023 முதல் 31.01.2024 வரை ஓராண்டு நீட்டிப்பு செய்து ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. ஆனால் விவேகானந்தா தொண்டு நிறுவனமே தொடர்ந்து மேற்பார்வை மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணிநீட்டிப்போ அல்லது பணிமுறிவோ செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை. ஆனால் மேற்படி தொண்டு நிறுவனம் மூலமாகவே நாளது தேதி வரை இத்தங்குமிடத்தை பராமரிப்பு செய்து வருகின்றனர். இந்நிறுவனத்திற்கு 31.1.2023 தேதிவரை பராமரிப்பு தொகை வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் உள்ள கூட்ட நடவடிக்கைகளின்படி பராமரிப்புத் தொகை 5 வருடங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றுள்ளதால் நகராட்சி பொதுநிதியிலிருந்து இனிவருங்காலங்களில் பராமரிப்புத் தொகை வழங்க போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியினை மேற்படி நிறுவனத்திற்கு பராமரிப்பு செய்த காலங்களுக்கு மட்டும் வழங்கி மேற்படி தொண்டு நிறுவனத்திற்கான பணிநீட்டிப்பினை ரத்து செய்து கம்பம், பொது மருத்துவமனை பராமரிப்பில் பணியினை மேற்கொள்ளலாம் – மன்றத்தின் பார்வைக்கும்,அனுமதிக்கும், (ந.க.எண்.261–1/2016/இ1) |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 430 அனுமதிக்கப்பட்டது |
| 4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3963/2018/எச்1 நாள்.27.02.2020 இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணிகளை செய்து வந்த நிலையில் எதிர்வரும் 31.12.2023 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி பொது மக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.01.2024 முதல் 31.03.2024 வரை ஒப்படைக்கப்படும் வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ20.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண்.3963/2018/எச்1) |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** 1.பொது சுகாதார நலன் கருதி டெங்கு காய்ச்சல் வராமல்தடுக்க பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தினை 01.01.2024 முதல் 31.03.2024 வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேசசெலவினத்தொகை ரூ20.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கலாம்.<br><br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்த நீட்டிப்பு மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 431 அனுமதிக்கப்பட்டது |
| 5 | மனுதாரர் திருமதி.அ.சஹிலா பர்வீன் க/பெ C.A.Z.அப்துல் மாலிக் என்பவர் கம்பம் நகராட்சி வார்டு–3 சர்வே எண் –226 பகுதி நகரளவை வார்டு–Bப பிளாக் – 03, நகரளவு–1/10–இல் உள்ள 2088.17ச.மீ (0.51 ஏக்கர்) பரப்பளவு ள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு விண்ணப்பித்து உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களால் வரிசீலக்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.உ.இ(தே.மா) எண் 47/2022 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது **மனைப்பிரிவு விவரங்கள்** |

| **மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு** | **2088.15 ச.மீ( 0.51 ஏக்கர்)** |
|---|---|
| உத்தேச சாலைகள் | 1298.43 ச.மீ(0.32 ஏக்கர்) |
| ஒதுக்கப்பட்ட மனைகள் 6 எண்ணம் பரப்பளவு | 789.74ச.மீ(0.19 எக்கர்) |
| உள்ளாட்சி உபயோகம் | 9.00 ச.மீ |
| TANGEDGO உபயோகம் | 9.00 ச.மீ |

மேற்படி உத்தேச சாலைகள் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கான இடங்கள் தானபத்திர ஆவண எண் 3871/2022 நாள் 27.06.2022 படி மனுதாரர் இந்நகராட்சியில் ஒப்படைப்பு செய்துள்ளார் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் வழங்கப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12849/2022/டிபி2 நாள்.20.10.2022 ன் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுற்கு இறுதி ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 432 அனுமதிக்கப்பட்டது |
| 6 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டிட அனுமதி வழங்கப்படும் கட்டிடங்களுக்கு வசூலிக்கப்படும் கட்டிட உரிமையானை கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் போன்றவை திருத்தியமைக்கப்பட்டு கீழ்கண்ட இனங்களுக்கு புதிய கட்டணங்கள் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் பெயர் | வகை விபரம் மீட்டரில் | காலம் | பழைய கட்டண விகிதம் | புதிய கட்டண விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 120 | ஒரு நிலத்தையோ அதன் பாகத்தையோ மனைப்பிரிவாக பிரித்துக் கொள்வதற்கு | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கு | ஒரு தடவை மட்டும் | 5000 | 6000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 120 | அனுமதிக்கப்பட்ட எந்த மனைப்பிரிவிற்கு பொது அல்லது சொந்த தெருவை நோக்கி உள்ளதுமான இடத்தில் கட்டிடம் கட்டிக்கொள்வதற்கு மனை அங்கீகாரம் செய்ய | மனை ஒன்றுக்கு | ஒரு தடவை மட்டும் | 500 | 1000 |
| 3 | 133 | குடிசை நீங்கலாக புது கட்டிடம் கட்டவோ, புதுப்பித்துக் கட்டடவோ, மாறுதல் செய்து கட்டவோ அனுமதி விபரம் | | | | |
| | | 1)குடியிருப்பு கட்டிடம் தரைத்தளம் அ)R.R.C.அல்லது லாகடக் கட்டிடம் | 10ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 500 | 600 |
| | | ஆ)ஓடு,தகரம்,சிமெண்ட் தகர கட்டிடம் | 10.ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 200 | 300 |
| | | முதல்தளம் அல்லது அதன்மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | | | | |
| | | அ) R.R.C அல்லது வாகடக் கட்டிடம் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 330 | 400 |
| | | ஆ)ஓடு,தகரம்,சிமெண்ட் தகர கட்டிடம் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 180 | 200 |
| | | 2) குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் குடியிருப்பு இல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் ஏதுவாயினும் | | | | |
| | | 1) R.R.C. அல்லது லாகடக் கட்டிடம் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 750 | 1000 |
| | | 2)தகரம் அல்லது சிமெண்ட் தகடு | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 275 | 300 |
| | | 3)சுற்றுச்சுவர் கட்ட | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 75 | 100 |
| | | 4)சுற்றுச்சுவர் (மண்) அல்லது வேலியோட | 10 ச.மீட்டர் நீளத்திற்கு அதன் பாகத்திற்கு | 5 வருடங் கள் | 150 | 200 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5)மலஅறை, குளியலறை கட்டுவதற்கு | முக்கிய கட்டிடத்துடன் கூடியது தனியாக 25 ஒவ்வொன்றிற்கு | 5 வருடங்கள் | 150 | 200 |
| | | 6)செப்டிக் டேங்க் | முக்கிய கட்டிடத்துடன் தனியாக | 5 வருடங்கள் | 225 | 500 |
| | | 7)மாடி படிக்கட்டு 1க்கு | முக்கிய கட்டிடத்துடன் தனியாக | 5 வருடங்கள் | 300 | 500 |
| | | 8)பழைய சுவர்களை கொத்தி பூச அல்லது தளம்போட அல்லது இதுபோன்ற சில்லரை மராமத்து வேலைகளுக்கு | ஒருதடவை மட்டும் | 3 மாதம் | 750 | 1000 |
| | 135(3)(5) | 9)அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தால் | கட்டிட உரிமையாணை கட்டணத்தில் 50% கூடுதலாக 'செலுத்தவேண்டும் | | | |
| 4 | 164A | குழாய் கிணறு, குழிகிணறு, போன்ற எவ்வகை கிணறு அமைக்க | ஒவ்வொன்றுக்கும் | 5 வருடங்கள் | 300 | 500 |
| 5 | | குடிசைகள் கட்ட புதுப்பிக்க 20 ச.மீட்டர் பாகத்திற்கு குறைவாக | ஒவ்வொலு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 5 வருடங்கள் | 125 | 200 |
| 6 | | அ) தற்காலிக குடிசை அல்லது கொட்டகை அல்லது செட்டு போட | 10ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 1 வருடம் | 125 | 200 |
| | | ஆ)அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடங்களுக்கு உண்மை நகல் வழங்க | நகர் 1–க்கு | | 225 | 500 |
| 7 | 109 | 1)நிரந்தர திரையரங்கு கட்டிக்கொள்ள தடையில்லா சான்று வழங்குதற்கு | இனம் 1–க்கு | ஒரே தடவை | 7500 | 10000 |
| | 109 | 2)தற்காலிக திரையங்கு கட்டிக்கொள்ள தடையில்லா சான்று வழங்குவதற்கு | இனம் 1–க்கு | ஒரே தடவை | 15000 | 20000 |
| | 109 | 3)சர்க்கஸ்,பொருட்காட்சி தற்காலிக கொட்டகை அமைத்துக்கொள்ள | இனம் 1–க்கு | மாதம்1–க்கு | 7500 | 10000 |
| | 109 | 4)நகரமைப்பு திட்ட பாதிப்பு இல்லையென சான்று வழங்க | இனம் 1–க்கு | ஒரே தடவை | 225 | 2000 |
| | 109 | 5)கட்டிட முடிவு சான்று வழங்க | இனம் 1–க்கு | ஒரே தடவை | 225 | 2000 |
| | 109 | 6)மனைப்பிரிவு வரைபட நகல் வழங்க | இனம் 1–க்கு | ஒரே தடவை | 5000 | 6000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 137 | 7)கட்டிட தளவாட சாமான்கள் தெருவின் ஓரம் குவித்து வைக்க | இனம் 1-க்கு | ஒரே தடவை மட்டும் | - | கட்டிட உரிமை கட்டணத்தில் 50% |
| 8 | 109 | 1)வீடியோ ஆடியோ ஒளிபெருக்கி விளம்பரம் செய்ய,நூரலகம் அமைக்க தடையில்லா சான்று வழங்க | இனம் 1-க்கு | ஒரு நாள் மட்டும் | 450 | 500 |
| | 109 | 2)வீடியோ தியேட்டர் அமைக்கதடையில்லா சான்று வழங்க | இனம் 1-க்கு | ஒரு தடவை மட்டும் | 12000 | 15000 |
| | 109 | 3)நகர் பகுதிகளில் திரைப்படங்கள் தயாரித்தல் | இனம் 1-க்கு | நாள் ஒன்றுக்கு | - | 2500 |
| | 117 | 4)டிஜிட்டல் பேனர் நிறுவ உரிமையாணைக் கட்டணம் | இனம் 1-க்கு | 6 நாட்களுக்கு | - | 500 |
| 9 | | **வளர்ச்சி கட்டணம்** | | | 4.00 | 5.00 |
| | | குடியிருப்பு மனைக்கு | | 5 | 4.00 | 10.00 |
| | | குடியிருப்பு கட்டிடம் | 1 ச.மீ | ஆண்டிற்கு | 7.50 | 10.00 |
| | | வணிக கட்டிடம் மனைக்கு | | | 7.50 | 20.00 |
| | | வணிக கட்டிடங்களுக்கு | | | | |

<u>அலுவலக குறிப்பு:</u> 4 ஆண்டுகளுக்கு மேலாக கட்டண விகிதம் திருத்தியமைக்கப்படாமல் உள்ள நிலையிலும் நகராட்சியின் நிதிநிலையை உயர்த்துவதற்கும் திருத்தியமைக்கப்பட்ட கட்டண விகிதத்தை 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட கட்டண உயர்வு விவரத்தினை தேனி மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்** - 433 அனுமதிக்கப்பட்டது

7 **கம்பம் நகராட்சி வடக்கு தினசரி சந்தையின் வெளிப்புறம் கட்டப்பட்டுள்ள கடைகள் மாத வாடகை அடிப்படையில் 03.01.2024 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ, எண், | பெயர் | கடை எண் | மாத வாடகை |
|---|---|---|---|
| 1) | **திருமதி. இந்திரா<br>குரங்குமாயன் தெரு,<br>கம்பம்** | 1 | ரூ. 4150/- |
| 2) | **திரு.தினேஷ்குமார்<br>சுக்காங்கல் ட்டி தெரு,<br>கம்பம்** | 8 | ரூ.. 4150/- |
| 3) | **திரு.பிச்சைமணி<br>குரங்குமாயன் தெரு,<br>கம்பம்** | 11 | ரூ.4150/- |
| 4) | **திரு.குமரன்<br>44,உலகத்தேவர் முதல் தெரு,<br>கம்பம்** | 12 | ரூ.4150/- |
| 5) | **திரு.செல்வக்குமார்<br>குரங்குமாயன் தெரு,<br>கம்பம்** | 22 | ரூ.4150/- |

| | |
|---|---|
| | அலுவலக குறிப்பு: 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட கடைகளுக்கு 9 முறை **பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் முன் வைப்புத்தொகை செலுத்தி ஏலம் கோர யாரும் முன் வரவில்லை, தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரியதில்** வரிசை எண் 1முதல் 5 வரை வரப்பட்ட **ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதால்** மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 434 அனுமதிக்கப்பட்டது |
| 8 | **2023–2024 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம் மெட்டு ரோடு கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல்** செய்யும் உரிமத்திற்கு 03.01.2024அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்த இனத்திற்கு 13 முறை **பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரு டெண்டர் மட்டும் வரப்பட்டு,14வது முறையாக மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.அதிலும் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பட்டதில்,மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கூடுதலாக திரு.டி.வாசிமலை என்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.அதன் விவரம் பின்வருமாறு** |

| வ,எண், | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1) | **திரு.டி,வாசிமலை<br>கருக்கட்டான் பட்டி ரோடு.<br>உசிலம்பட்டி தாலுகா<br>மதுரை மாவட்டம்.** | ரூ.3,05,000/– |

மேலும் 04.01.2024 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்,தேனி அவர்களின் திட்டப்பணிகள் ஆய்வுக்கூட்டத்தில்,மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்,தேனி அவர்களின் அறிவுரையின்படி இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | அலுவலக குறிப்பு : நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும்<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 435 அனுமதிக்கப்பட்டது |
| 9 | **கம்பம் நகராட்சி வடக்கு தினசரி சந்தை கட்டணம்** வசூலிக்கும் உரிமம்,புதிய பேருந்து நிலைய இருசக்கரவாகனம் கட்டணம் **வசூலிக்கும்** உரிமம்,**கட்டண கழிப்பறை வசூலிக்கும்** உரிமம்,பலன் தரும் மரங்கள்,வடக்கு தினசரி சந்தையின் உள்ள கடைகள்7,9,13,18,19,21,23,ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் **வசூலிக்கும்** உரிமம்,மட்டன் ஸ்டால் கடைகள் 4,5,6,7,8,மற்றும் சுகாதார நிலையம் அருகிலுள்ள **கட்டண கழிப்பறை** வசூலிக்கும் உரிமம் ஆகிய இனங்களுக்கு **15.02.2024 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**. |

| வ,எண், | பெயர் | தொகை | இனம் |
|---|---|---|---|
| 1) | **திரு.சி.எம்.ஆனந்தன்<br>கம்பம்** | ரூ. 391000/– | புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனம் **கட்டண** வNலிக்கும் உரிமம் |
| | **திருமதி.எ.அமுதா<br>உலகத்தேவர் தெரு<br>கம்பம்** | ரூ. 385500/– | |

| | | | |
|---|---|---|---|
| 2) | **திருமதி.எ.அமுதா**<br>**உலகத்தேவர் தெரு**<br>**கம்பம்** | ரூ. 1965000/- | புதிய பேருந்து நிலைய<br>கட்டண கழிப்பறை<br>**வ**Nலிக்கும் உரிமம் |
| | **திரு.சி.எம்.ஆனந்தன்**<br>**கம்பம்** | ரூ. 1960000/- | |
| 3) | **திரு.எம்.ஜெய்லானி**<br>**ஓடைக்கரை தெரு,**<br>**கம்பம்** | ரூ. 512100/- | ஆடு அடிக்கும் தொட்டி<br>**கட்டண** வசூலிக்கும் உரிமம் |
| | **திரு.எம்.காஜாமைதீன்**<br>29,**குளக்காரன் தெரு,**<br>**கம்பம்.** | ரூ. 484000/- | |
| 4) | **திருமதி.எஸ்.ஜெயலட்சுமி**<br>**ஓடைக்கரை தெரு,**<br>**கம்பம்** | ரூ. 18600/- | மாத வடகை<br>வடக்கு தினசரி<br>சந்தையில்வெளிப்புறம் உள்ள<br>உணவகம் |
| | **எம்.கே.கிருஷ்ணன்**<br>**ஆங்கூர்பாளையம் ரோடு**<br>**கம்பம்** | ரூ.15700/- | |
| | **சி.ராஜாராம்**<br>**குரங்குமாயன் தெரு**<br>**கம்பம்** | ரூ.15000/- | |

அலுவலக குறிப்பு:1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) **தற்போது மேற்கண்ட இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில்** வரிசை எண் 1முதல் 4 வரை வரப்பட்ட **ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலாக குத்தகை தொகையினை கொடுத்துள்ள குத்தகைதாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்** - 436 அனுமதிக்கப்பட்டது

10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். 337 நாள் 16.06.2023ல் கொரோனா பரவல் காரணமாக ஆண்டு குத்தகை மற்றும் கடைகள் நடத்தப்படாமல் அடைக்கப்பட்டு இருந்த காலங்களான 01.06.2020 முதல் 31.08.2020 வரையிலும் 01.05.2021 முதல் 30.06.2021 வரையிலும் ஆக மொத்தம் 5 மாதங்களுக்கு குத்தகைதாரர்கள் செலுத்தப்பட வேண்டிய வாடகை மற்றும் குத்தகை தொகை நிலுவையினை ஈடு செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1)மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** - 437 அனுமதிக்கப்பட்டது

11 நகர்மன்றதீர்மான எண்.422 நாள்.05.01.2024-ன்படி, கணினி உபகரணங்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் உள்ளபழைய 5 KVA Online UPS திரும்பபெற்றுக் கொண்டு புதிதாக 5 KVA Online UPS-1 No வாங்குவதற்கு 01.02.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் தகுதி வாய்ந்த உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவன உரிமையாளர்களிடமிருந்து கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்.** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ,** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.** | **கூடுதல் ரூ,** | **குறைவு ரூ,** |
|---|---|---|---|---|---|
| | | | | (ஒருஎண்ணம்) | |
| 1 | கம்பம்நகராட்சியில் உள்ள பழைய 5 KVA Online UPS திரும்ப பெற்றுக் | 2,00,000/ | 1)Ultra Power Solution,<br>8/33, Lourdhu Nagar | **65.000/-** | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கொண்டு புதிதாக 5 KVA Online UPS–1 No விநியோகம் செய்வதற்கு | - | 7th Main Road, K.Pudur,Madurai-625007. | | |
| | | | | 2)RK Power Solution, M3/136,Sector, 6,Vaigai Street 1stKoodal Pudur,Madurai-625017. | - | 68700/- |
| | | | | 3)Sun Power Controls, No.5/3,1st street, EMG Nagar, K.Pudur | 70000/- | - |

அலுவலக குறிப்பு: 1) மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் Ultra PowerSolution, Madurai என்பவரால் குறைவான விலை விகிதம் வழங்கப்பட்டுள்ளதைமன்றம்அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1335/2023/இ1)

**தீர்மான எண்** – 438 அனுமதிக்கப்பட்டது

12 கம்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி திருJ.S.D.அன்பழகன் .த/பெ, துரையப்பதேவர்,15 எல்.எப்.ரோடு, வடக்குப்பட்டி, கம்பம் என்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டதில், மேற்காணும் மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில். மேற்படியார் பொதுப்பணித்துறை (நீவஅ)யில் 1ஏ–இல் ஒப்பந்ததாரராக பதிவு பெற்றுள்ளார். எனவே கம்பம் நகராட்சியில் 2023–2024–ஆம் ஆண்டிற்கு1–ஆம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.242/2024/இ1)

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்** – 439 அனுமதிக்கப்பட்டது

13 கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி, கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான கம்பம்–குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புறமேம்பாட்டுத்திட்டம் 2018–19–ன் கீழ், ரூ.410.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்புநிலையம் (FSTP)–செயல்பாட்டிற்கு(Consent to Operation) தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.F.0857TEN/RS/DEE/TNPCB/A/2023 – 20.10.2023–ஆம் தேதிய கடிதத்தில் 31.03.2024 வரை அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.தற்போது தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம்எண். F.TEN0903/RS/DEE/TNPCB/ TEN /2024– 13.02.2024–ஆம் தேதிய கடிதத்தில், கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டிற்கு (Consent to Operate) புதுப்பித்தல் 31.03.2024 வரை முடிவடைவதால் 2024–2025–ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறும் பொருட்டு (Consent to Operate) ரூ. 43,600/– ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தேனிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2121/2019/இ1

அலுவலகக்குறிப்பு–1) மன்றம்அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 440 அனுமதிக்கப்பட்டது

14 கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.4, ஓடைத்தெருவில் அமைக்கப்பட்டுள்ள நவீன ஆடு அடிக்கும் தொட்டி செயல்பாட்டிற்கு (Consent to Operate) தேனி, மாவட்ட சுற்றுச்சூழல்

| | |
|---|---|
| | பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம்எண்.F.TEN0719/RS/DEE/TNPCB/TEN/2024, 12.02.2024–ஆம் தேதிய கடிதத்தில், நவீன ஆடுஅடிக்கும் தொட்டி செயல்பாட்டிற்கு (Consent to Operate) புதுப்பித்தல் கட்டணம் ரூ.10,000/–ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்காணும் புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.10,000/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.3595/2016/இ1) |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி புதுப்பித்தல் கட்டணத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம் |
| | **தீர்மான எண்** – 441 அனுமதிக்கப்பட்டது |
| 15 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 ஆங்கூர்பாளையம் சாலையில் நவீன எரிவாயு தகன மேடை இயக்குவதற்கு தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் கடிதஎண். F.TEN0719/RS/DEE/TNPCB/TEN/2024, 13.02.2024–ஆம் தேதிய கடிதத்தில் ஒப்புதல் காலம் 01.04.2023 முதல் 31.03.2024 வரை முடிவடைகிறது. ஆதலால் 01.04.2024 (2024–2026) முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு இயக்குவதற்கான ஒப்புதல் (Consent to operate) வழங்குவதற்கான புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.14,200/– செலுத்த கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.14,200/–ஐ தேனி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.2700/2022/இ1) |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 442 அனுமதிக்கப்பட்டது |
| 16 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.25741/2023/SS2, 26.10.2023–ம் தேதிய செயல்முறை கடிதத்தில், பள்ளி கல்வி மேம்பாட்டு மான்யம் (SFC) 2023–2024–ன் கீழ், கீழ்காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது<br><table><tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>திட்ட மதிப்பீடு (ரூ, இலட்சத்தில்)</th></tr><tr><td>1)</td><td>Construction of 2+2 Class Room Building at KallarHr.Sec.School</td><td>68.00</td></tr><tr><td>2)</td><td>Construction of 2+2 Class Room Building and Toilet Building at MohaideenAndavarPuram Girls Hr.Sec.School</td><td>95.00</td></tr></table>அதன்படி மேற்காணும் பணிகளுக்கு கட்டிடம் கட்டும் இடத்தில் மண் பரிசோதனை (**Soil Test**)மற்றும் கட்டிட வடிவமைப்பு (**Structural Steel Design**) செய்து தருமாறு கேட்டுக் கொண்டதற் கிணங்க, மண் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமைக்கு, பட்டுக்கோட்டை. கல்வி நிலையத்தலைவர், அண்ணா பல்கலைக்கழகத்தின் கடிதத்தின் வாயிலாக Consultancy Charges தொகை ரூ.94400/–க்கு பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. எனவே மேற்காணும் பட்டியல் தொகைரூ.94400/–ஐ பட்டுக்கோட்டை. கல்வி நிலையத்தலைவர், அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்க மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1175/2023/இ1) |
| | அலுவலகக்குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 443 அனுமதிக்கப்பட்டது |
| 17 | கம்பம் நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால்சாமி நகர் பகுதியில் அமைந்துள்ள நுண் உயிர் உர மையத்தில் (MCC) உள்ள BIO–gas Plant–ன் இயந்திரத்தில் பேரிங் மற்றும் உதிரிபாகங்கள் பழுதடைந்து இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12,500/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.310/2024/இ1) |
| | அலுவலகக்குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் இயந்திரத்தை பழுது நீக்கம் செய்வதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**தீர்மான எண்** – 444 அனுமதிக்கப்பட்டது

18 பொது நிதி 2022–2023–ன் கீழ், இந்நகர்மன்ற தீர்மான எண்.424 நாள்.05.01.2024–ன்படி, கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு 14.02.2024 அன்று வரப்பெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின்பெயர்** | **மதிப்பீடுரூ.** | **ஒப்பந்ததாரர்பெயர்திருவாளர்கள்** | **மதிப்பீட்டு விலை விகிதம்** | |
|---|---|---|---|---|---|
| | | | | **கூடுதல் %** | **குறைவு %** |
| 1 | **<u>பொதுநிதி 2023–2024</u>**<br><br>கம்பம் நகராட்சி வார்டுஎண். 32 காந்தி நகர் செல்லும் பிரதான சாலையின் முன்புறம் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் அமைக்கும் பணி | 3,60,000/– | M/S ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | | (–) 0.01 |
| | | | திருஆர்.சபீர்அலி | 2.80 | – |

(ந.க.எண்.310/2024/இ1)

அலுவலகக்குறிப்பு– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/S ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட(–) 0.01 சதவிகிதம் குறைவாக வழங்கியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 445 அனுமதிக்கப்பட்டது

19 சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம்.ந.க.எண்.39259/2015/SBM–1 நாள்.08.06.2023–ன்படி, "தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 1.0 திட்டத்தின்கீழ்" (SBM(U)1.0)– 2023–2024–இன் கீழ், ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில், கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான ஆங்கூர்பாளையம் பழைய உரக்கிடங்கில் மீதமுள்ள குப்பைகளை (7714m3) அப்புறப்படுத்தும் பணிக்கு கீழ்காணும் . விபரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| இடம் | குப்பைகளின்அளவு (cu.m) | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | நிதிமுறை | | |
|---|---|---|---|---|---|
| | | | GOI | STATE | ULB |
| ஆங்கூர்பாளையம் உரக்கிடங்கு | 7714m3 (6172மெ.டன்) | 47.00 | 55% | 35% | 10% |

மேலும் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களின் ந.க.எண்.6189/2022/B2. 14.06.2023–ஆம் தேதிய செயல் முறை உத்தரவில் தொழில் நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு, அதன்படி 07.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று 20.09.2023 அன்று M/s,Sharvesh Constructions, திண்டுக்கல் நிறுவனத்தினருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.19009/2022/SBM–1.02.01.2024–ஆம் தேதிய செயல்முறை உத்தரவில், மேற்காணும் நிர்வாக அனுமதியினை திருத்தம் செய்து கீழ்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது. அதன் விபரத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| இடம் | குப்பைகளின்அளவு (cu.m) | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | நிதிமுறை (ரூ.கோடியில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | GOI | STATE | ULB |
| ஆங்கூர்பாளையம் உரக்கிடங்கு | 7714 m3 [6943மெ.டன்) | 53.00 | 0.19 | 0.13 | 0.21 |

1) அலுவலகக்குறிப்பு– 1 மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடருவதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | **தீர்மான எண்** – 446 அனுமதிக்கப்பட்டது |
| 20 | கம்பம் நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.மு.அய்யப்பன் என்பவர் தனக்கு தாமதமாக வழங்கப்பட்ட ஓய்வுக்கால பணிகொடை வட்டி தொகையினை வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண் WP(MD).No 30779/2023 இல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் கம்பம் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. மு.ஹேமகார்த்திகேயன் வழக்கை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூபாய்.10,000/– ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 447 அனுமதிக்கப்பட்டது |
| 21 | கம்பம் நகராட்சியில் வாரச்சந்தை காவலராக பணிபுரிந்த திரு.நாகராஜ் என்பவரின் பணி காலத்தை முன் தேதியிட்டு வரன்முறை செய்ய கோரி அன்னாரின் மனைவி திருமதி.நா.சந்திரா என்பவர் தொடர்ந்த வழக்கில் WP(MD).No 838/2019 இல் கம்பம் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. மு.ஹேமகார்த்திகேயன் வழக்கை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூபாய்.10,000/– ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம் |
| | **தீர்மான எண்** – 448 அனுமதிக்கப்பட்டது |
| 22 | வட்டாட்சியர், சமுக பாதுகாப்பு திட்டம், உத்தமபாளையம் அவர்களின் ந.க.எண்.151/2022/அ2, 05.01.2024 ஆம் தேதிய காணும் கடிதத்தில் மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்பட்ட 70 மனுக்களுக்கு வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள சான்று கோரப்பட்டது. அதன்படி கம்பம் நகராட்சியில் 2003–2004 ஆம் அங்கீகரிக்கப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கணக்கெடுப்பின்படி பயனாளிகளின் பட்டியல் பெயர்கள் சரிபார்க்கப்பட்டு 225 நபர்களுக்கு மட்டுமே வறுமை கோட்டு பட்டியலில் பெயர் இடம் பெற்ற விவரத்தினை அனுப்பி வைக்கப்பட்டது, இருப்பினும் மீதம் உள்ள 45 பயனாளிகளுக்கு மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் என்பதால் சிறப்பு கவனம் செலுத்தி தமிழக அரசின் அறிவுரைப்படி மனுக்களை முடிவுக்கு கொண்டு வர உள்ளதால் அப்பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டுப்பட்டியல் தொடர் எண் மட்டும் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 18.01.2024 ஆம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்திய பின்னர் 22.01.2024 ஆம் தேதி மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி மாவட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் கைபேசி மூலம் நகராட்சி ஆணையர் கம்பம் அவர்களுக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்க அறிவுறுத்தியதற்கிணங்க, மீதம் உள்ள 45 பயனாளிகளுக்கும் தொடர் எண் வழங்கவும் மேலும் வறுமைக்கோட்டுப் பட்டியலில் தற்போது 45 பயனாளிகளுக்கு வழங்கப்படும் இந்த தொடர் எண் மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்பட்ட மேற்கண்ட மனுக்களுக்கு இணையதள பயன்பாட்டிற்கு மட்டும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று45 பயனாளிகளுக்கு தொடர் எண் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 449 அனுமதிக்கப்பட்டது |
| 23 | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான காந்திநகர் , நந்தகோபாலன் கோவில், வடக்குப்பட்டி, வாரச்சந்தை வளாகம், எல்.எப்.ரோடு மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலைய மேல்நிலைத்தொட்டிகளிலிருந்து, வார்டு 1 முதல் 33 வரையிலான வார்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு விநியோகிக்கப்படும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மாதந்தோறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர் பரிசோதனை மையம் தேனி– இல் பரிசோதனை சான்றுகள் பெற்று வர ஆண்டுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **தீர்மான எண்** – 450 அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 24 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு. எண். 1முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின் படி– **5 சதவீதம்** உயர்வு செய்து **2024–2025–** ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சேதாரக்கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | நீளம் | ஜல்லிதளம் | | தார்சாலை | | சிமெண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2023–24 | 2024–25 | 2023–24 | 2024–25 | 2023–24 | 2024–25 |
| 1 | 0 முதல் 30 மீ. வரை | ரூ 2114 /– | ரூ . 2220/– | ரூ . 4487/– | ரூ 4712/– | ரூ . 5172/– | ரூ 5431/– |
| 2 | 30 முதல் 90 மீ. வரை | ரூ . 3311/– | ரூ 3477/– | ரூ 5667/– | ரூ 5950/– | ரூ . 6347/– | ரூ 6665/– |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அ னுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 451 அனுமதிக்கப்பட்டது |
| 25 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்– 14, செக்கடித்தெரு (வாணியர் மண்டபம் வடபுறம்) சேணை ஓடையில் உள்ள பழைய பழுதடைந்த பாலத்தினை அகற்றி அவ்விடத்தில் புதிதாக பாலம் அமைக்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அவ்விடத்தில் உள்ள 5 இஞ்ச் PVC பைப் குடிநீர் பகிர்மான குழாயினை அகற்றி புதிதாக 6 இஞ்ச் DI பைப் அமைக்க வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. 65000/– (ருபாய் அறுபத்தைந்தாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 452 அனுமதிக்கப்பட்டது |
| 26 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்– 7, சுப்பிரமணியர் கோவில் தெரு, மற்றும் அதன் குறுக்குத்தெருக்கள் குடியிருப்பு விரிவாக்கப்பகுதி என்பதால் குடியிருப்புக்களுக்கு புதிய குடிநீர்குழாய் இணைப்புகள் வழங்கும் பொருட்டு, புதிய குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ 1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்** – 453 அனுமதிக்கப்பட்டது |
| 27 | கம்பம் நகராட்சி பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் உள்ள கீழ்கண்ட ( 11– எண்ண்ம்) மின் மோட்டார்கள் மற்றும் மின் தொடர்பு சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்வதற்கான பணிக்காலம் 31.03.2023 உடன் முடிவடைகிறது. எனவே எதிர்வரும் 2024–2025 – ம் ஆண்டிற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய நிலையில், விரைவில் பாராளுமன்ற தேர்தல் வர இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கான கால அவகாசம் இல்லாத காரணத்தினால் மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.04.2024 முதல் 30.06.2024) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் முலமே பணிகளை மேற்கொள்ள அனுமதியும், உத்தேச மதிப்பீட்டு தொகை **2.50** இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள கீழ்கண்ட மின் மோட்டார்கள் | சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் உள்ள கீழ்கண்ட மின் மோட்டார்கள் |
|---|---|
| 1) 75 HP- **2 Nos** | 10 HP – **4 Nos** |
| 2) 150 HP- **1 No** | 30 HP - **2 Nos** |
| | 40 HP - **2 Nos** |

அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 454 அனுமதிக்கப்பட்டது

28

கம்பம் நகராட்சி நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறை கிணறு அமைத்து 23.09.2014 முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டதற்கு, இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண்.365, நாள்.11.09.2023 –ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 31.12.2023–ல் முடிவடைந்த நிலையில், மேலும் 3–மாத காலத்திற்கு 31.03.2024 முடிய பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மேலும் 3–மாத காலத்திற்கு 01.04.2024 முதல் 30.06.2024 வரை அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் G.S.T உட்பட **ரூ.2,40,000/–** க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | பணிபுரியும் நாட்கள் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | 3–மாதத்திற்கான மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 273 | 568.00 | 155064.00 |
| 2 | காவலர் 1 நபர் | 91 | 426.00 | 38766.00 |
| | SUB TOTAL | | | **193830.00** |
| 3 | Provision for G.S.T.18% | | | 34889.00 |
| 4 | Provision for TamilNadu Labour welfare fund 1% | | | 2400.00 |
| 5 | Contigences and all other unforseen of items work. | | | 8880.00 |
| | **TOTAL** | | | **240000.00** |

அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 455 அனுமதிக்கப்பட்டது

29 கம்பம் நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020 ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால், வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண். 1136/2020/இ2 நாள்.01.12.2020 ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2/ நாள்.22.10.2020ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்தாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டதற்கு இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த்தாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண்.366, நாள்.11.09.2023–ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 31.12.2023–ல் முடிவடையும் நிலையில், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு மேலும் 4–மாதகாலத்திற்கு (01.03.2024 முதல் 30.06.2024 வரை) அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI.EPF.GST உட்பட தொகை ரூ.15,60,000/– க்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண். | பணியாளர் விவரம் | பணிபுரியும் நாட்கள் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | 3– மாதத்திற்கான மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 366 | 636.00 | 232776.00 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Filter bed operator) 3 நபர் | 366 | 713.70 | 234214.00 |
| 3 | காவலர் 12 நபர் | 1464 | 385 | 563640.00 |
| 4 | ESI @ 4.75% as per labour act 1948 (employees contribution @ 1.75 % of the wages to be recovered from the staff salery and in total 6.5%) | | | 50237.43 |
| 5 | EPF @ matchi, ng contribution of 12% of the employees wages be payable towards EPF A/c both by Employer /contracter and employee | | | 126915.62 |
| | | **Sub Total** | | 1234783.26 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Provision For GST 18% | | | 222260.99 |
| | Provision For Tamilnadu Labour welfare fund 1% | | | 15600.00 |
| | Contingences and all other unforseen of items work. | | | 87355.75 |
| | | **Total** | | **15600000.00** |

அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 456 அனுமதிக்கப்பட்டது

30 கம்பம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்புக்கு பயன்படுத்தப்படும் 'ஹைட்ராலிக் ஈப்பு வாகனம் TN.60.T.7497–க்கு தகுதிசான்றுக்கான காலம் 01.02.2024– தேதியுடன் முடிவடைவதால் தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஈப்பு வாகனத்தில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரு. 60000/– (ருபாய் அறுபதாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

பணிகள்– 1. ஈப்பு வாகனத்திற்க்கு இஞ்சின் ஆயில், கியர்பாக்ஸ் ஆயில், கூலன்ட் ஆயில் மற்றும் நான்கு வீல் கிரிஸ் பேக்கிங், ஹைட்ராலிக்ஸ் ரொட்டேசன் சாப்ட் மாற்றம் செய்யும் பணிகள்,

பணிகள்– 2. ஈப்பு வாகனத்திற்க்கு பின்பக்கம் இரண்டு டயர்கள் மாற்றம் செய்தல். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற (ஜி.எஸ்.டி) உட்பட

அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–இன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 457 அனுமதிக்கப்பட்டது

31 கம்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் தெருவிளக்கு பராமரிப்புக்கு பயன்படுத்தப்படும் 'ஹைட்ராலிக் ஈப்பு வாகனம் TN.60.T.7497–க்கு வாகன காப்பீட்டு காலம் ஜனவரி–2024 உடன் முடிவடைவதால் காப்பீட்டு கட்டணம் ரு. 18891/– செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** – 458 அனுமதிக்கப்பட்டது

32 கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 17 வரையிலான பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு 2023–2024 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்பணிகள் திரு. எல். இராஜேந்திரன் அவரக்ளுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.03.2024 உடன் முடிவடைகிறது. எனவே எதிர்வரும் 2024–2025 – ஆம் ஆண்டிற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய நிலையில், விரைவில் பாராளுமன்ற தேர்தல் வர இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கான கால அவகாசம் இல்லாத காரணத்தினால் மேலும் **நான்கு** மாத காலத்திற்கு (01.04.2024 முதல் 30.07.2024 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் **மூலமே** பணிகளை மேற்கொள்ள பணி நீட்டிப்பு அனுமதியும், உத்தேச மதிப்பீட்டு தொகை **ரூ** 2,47,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |
| | **தீர்மான எண்** – 459 அனுமதிக்கப்பட்டது |
| 33 | கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 முதல் 33 வரையிலான பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு 2023–2024 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்பணிகள் திரு. எல். இராஜேந்திரன் அவரக்ளுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.03.2024 உடன் முடிவடைகிறது. எனவே எதிர்வரும் 2024–2025 – ம் ஆண்டிற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய நிலையில், விரைவில் பாராளுமன்ற தேர்தல் வர இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கான கால அவகாசம் இல்லாத காரணத்தினால் மேலும் **நான்கு** மாத காலத்திற்கு (01.04.2024 முதல் 30.07.2024) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் **மூ**லமே பணிகளை மேற்கொள்ள பணி நீட்டிப்பு அனுமதியும், உத்தேச மதிப்பீட்டு தொகை **ரூ.**2,45,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு– 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ்மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |
| | **தீர்மான எண்** – 460 அனுமதிக்கப்பட்டது |

**ஒப்பம்./–திருமதி.நெ.வனிதா நெப்போலியன்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள் : 15.02.2024**
**கம்பம்**

**// உண்மை நகல்//**

**ஆணையர்**
**கம்பம் நகராட்சி.**